DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 472/2026

Miscellaneous :

Sessions : PW –1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | முருகன் |
| Father / Husband Name | எட்டியப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07. 07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தோட்டநாவலில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 3 மாதங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 08.00 மணியளவில் எங்கள் தெருவில் நாய்கள் சண்டை போட்டு கொண்டிருந்தது. அப்போது பரத் என்பவர் கல்லை எடுத்து நாயை அடித்தார். அந்த கல் வந்து என் காலில் விழுந்துவிட்டது. அதனால் நான் ஏன் இருட்டில் கல்லால் அடிக்கிறாய் என்று கேட்டதற்கு பரத் என்பவர் தடியால் என்னை தலையில் அடித்துவிட்டார். நான் மயங்கி கீழே விழுந்துவிட்டேன். என் மனைவி என்னை ஆட்டோ மூலம் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என்னை மேல் சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

2. மேற்படி சம்பவம் தொடர்பாக நான் மதுராந்தகம் போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆஜர் எதிரி தான் என்னை அடித்த நபர். என்னை அடித்ததில் இருந்து அடிக்கடி மயக்கம் வருகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. ஆஜர் எதிரி எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் அவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் என் வீட்டின் முன் பகுதியில் நடந்தது. அது இருட்டான பகுதியா என்றால் ஆள் வருவது தெரியும் மரத்தின் நிழல் இருந்தது. என் வீட்டின் வாசலில் தெருவிளக்கு உள்ளதா என்றால் 10 அடி தூரத்தில் உள்ளது. நான் எதிரியின் அக்கா மகனை திட்டி அடிக்கவில்லை என்றால் இந்த பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்றால் நான் யாரையும் அடிக்கவில்லை. யார் கல்லால் நாயை அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நானும் பொதுவாக தான் பேசினேன்.

4. நான் எப்போது புகார் கொடுத்தேன் என்றால் மறுநாள் காலையில் போலிஸ் மருத்துவமனைக்கு வந்தார்கள் சுமார் 08.00 மணியளவில் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னை என் மனைவி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். எனக்கும் எதிரிக்கும் சண்டை நடக்கும் போது அந்த இடத்தில் யாரும் இல்லை என்றால் சரிதான். நான் சத்தம் போட்ட பிறகு தான் மற்ற நபர்கள் அங்கு வந்தார்கள் என்றால் இல்லை அங்கு யாரும் வரவில்லை நான் கீழே விழுந்த பிறகு என் மனைவி என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

5. நான் கீழே விழுந்த சிறிது நேரம் கழித்து தான் என் மனைவி வெளியே வந்தார். நான் குழந்தையை அடித்ததால் தான் எதிரி என்னை கேட்டார் என்றாலும் இருட்டில் நான் கால் இடறி கீழே விழுந்துவிட்டேன் என்றாலும் அதனால் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் அதை மறைத்து நான் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. குழந்தையை அடித்தற்கு எதிரி தரப்பில் புகார் கொடுத்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 472/2026

Miscellaneous :

Sessions : PW -2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ராஜேஸ்வரி |
| Father / Husband Name | முருகன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07. 07.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தோட்டநாவலில் வசித்து வருகிறேன். 31.01.2026 அன்று சனிக்கிழமை இரவு 08.00 -08.30 மணிக்குள் சாப்பிட்டுவிட்டு என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது ரக்சித் என்பவர் கல்லால் நாயை அடித்துவிட்டார். அந்த கல் என் கணவரின் காலில் விழுந்துவிட்டது. என் கணவர் ஏன் இரவு நேரத்தில் கல்லால் நாயை அடிக்கிறீர்கள் என்று கேட்ட போது மதன் என்பவர் தெவிடியா பையா உன்னை அடித்து சாகடித்துவிடுவேன் உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று சொல்லி கொண்டே பேட் விளையாடும் ஸ்டிக்கால் என் கணவரின் தலையில் அடித்துவிட்டார். என் கணவர் உடனே மயங்கி கீழே விழுந்துவிட்டார். நான் அவரை தூக்கி தண்ணீர் கொடுத்துவிட்டு ஆட்டோவில் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2. நாயை யார் அடித்தார் என்றால் ரக்சித் அடித்தார். அவர் தான் அடித்தார் என்று என் கணவர் சொன்னார். இந்த விவரம் என் கணவர் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரிந்திருக்காது என்றால் சரிதான். பிரச்சினை நடக்கும் போது நான் அங்கு தான் இருந்தேன். பிரச்சினை எங்கு நடந்தது என்றால் என் வீட்டின் வாசலுக்கு 2 அடி தள்ளி நடந்தது. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனை சென்றேன் என்றால் தோராயமாக 08.30 மணி இருக்கும். முதலில் மருத்துவமனைக்கு தான் சென்றோம். புகார் மறுநாள் காலையில் புகார் கொடுத்தோம். காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோமா என்றால் இல்லை.

3. புகாரை எங்கு வைத்து கொடுத்தோம் என்றால் மருத்துவமனையில் வைத்து கொடுத்தோம். எங்களை யார் விசாரணை செய்தார்கள் என்றால் எங்களை விசாரணை செய்த அதிகாரியின் பெயர் தெரியவில்லை. எங்களை எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காலை 06.00 முதல் 08.00 மணிக்குள் இருக்கும். அதன் பின்னர் என்னை வீட்டில் வந்து விசாரித்தார்கள். அதை வாக்குமூலமாக பதிவு

செய்தார்களா என்றால் செய்தார்கள். என் கணவரை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். என் கணவரை போலிசார் விசாரிக்கும் நான் அவருடன் இருந்தேன்.

4. இந்த பிரச்சினையே என் கணவரால் தான் வந்தது என்றாலும் அவர் குழந்தையை அடிக்கவில்லை என்றால் பிரச்சினை வந்திருக்காது என்றாலும் சரியல்ல. குழந்தையை அடித்ததற்கு எதிரி தரப்பில் புகார் கொடுத்துவிட போகிறார்கள் என்று என் கணவர் மூலம் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.